1975 மார்ச் 24]

Since this is a new type of mineral and as its different uses were not earlier experimented upon by private agencies, they have not come forward to buy the exfoliated vermiculite in large quantities. However, the Geology branch has been making enough publicity by way of distributing pamphlets and samples of exfoliated vermiculite to interested enterpreneurs. About 12 tonnes of exfoliated vermiculite has been manufactured and sold to Tamil Nadu Small Industries Corporation, I.C.F. of Southern Railway and to private firms on demand.

இதைக் கொண்டு insulation Boards, tiles, partition walls ஆகியவை செய்யலாம் என்று சொல்லப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : இந்தத் தாதுப்பொருளை வெட்டுவதற்கு எவ்வளவு மூலதனம் ஒதுக்கப்பட்டுள்ளது? இது அரசாங்கத் துறையில் செய்யப்படுகிறதா? தனியார் துறையில் செய்யப் படுகிறதா? மொத்தம் எவ்வளவு எடுக்கலாம் என்று கணக்கிடப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னிடத்தில் இருக்கிற குறிப்பின்படி வடாற்காடு மாவட்டத்தில் சேவத்தூர் என்ற இடத்தில் 60 எக்கராவில் இதுபோன்ற கனிப்பொருள் எடுக்கப்படுகிறது. அங்கே 3 லட்சம் டன் கனிவளம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்காக மூணேமுக்கால் லட்சம் ரூபாய் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Survey on granite deposits

* 440 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(a) whether it is proposed to undertake a Geological Survey in the districts of Dharmapuri, North Arcot, South Arcot and Salem to find out the availability of Black Granites; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) தொழில் வணிகத்துறையைச் சேர்ந்த மாநில புவியியல் பிரிவு தருமபுரி, சேலம், வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங் களில் புவியியல் ஆய்வினை மேற்கொண்டது. தருமபுரி, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் இவ்வாய்வு முடிவடைந் துள்ளது. வடாற்காடு மாவட்டத்தில் ஆய்வு நடந்தேறி வருகிறது.

இந்த ஆய்வு மேற்கொண்டதன் விளைவாக கணிசமான அளவு கருங்கல் படிமங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப் படிமங்களை வெட்டியெடுப்பது குறித்து அரசு பரிசிலித்து வருகிறது.

*441 வினா—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் குன்னம், பெரும்பாக்கம் பகுதியில் கிடைக்கும் கருப்புக் கற்களை ஏற்றுமதி செய்யாமல் அங்கேயே தொழிற்சாலை நிறுவி சுத்தம் செய்ய அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) வானூரில் கருங்கல் மெருகிடும் உற்பத்தி நிலையம் துவங்கு வதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் அங்கு கருங்கல் மெருகிடும் பயிற்சி நிலையம் துவங்குவதற்கான தொழில் வணிக இயக்குநரின் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இந்தக் கருங்கல் என்ன என்ன வேலைகளுக்கு உபயோகப்படும்? சிலர் யாருக்கும் தெரியாமல் வெட்டி வெளிநாடுகளுக்கு அனுப்பி பணம் பெறுகிறார்களே, அவை இந்த க்ரானைட்டில் சேருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எனக்குள்ள தகவல்படி அன்பாலிஷ்டாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக தகவல் இருக்கிறது. நாமே பாலிஷிங் யூனிட்டுகளை எங்கெங்கே அமைக்கலாம் என்பதை வணிக இயல் துறையினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். சில மாவட்டங்களில் ஆய்வு செய்யப் பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் ஆய்வு செய்யப்பட்ட பிறகு இதை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்பது யோசிக்கப்படும்.

திரு. அ. ஆறுமுகம்: கருங்கல்லை வெட்டி வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் தமிழக அரசுக்கு வருமானம் எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா?